**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு</u>**

தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கடந்த சில நாள்களுக்கு முன் அரபிக் கடலில் தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதி உருவானது. பின்னர் அது வலுவிழந்து காற்றழுத்தத் தாழ்வு நிலையாக மாறியது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் திருவள்ளூர் மாவட்டம் பூண்டியில் மட்டும் 20 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமை ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**<u>மேட்டூர் அணை நீர்மட்டம் 108.33 அடி</u>**

மேட்டூர் அணை நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 108.33 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 6,370 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 16,991 கனஅடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து விநாடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 6,500 கனஅடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,804 கனஅடி வீதமும், கொள்ளிடத்தில் 2,014 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**'பாசுமதி அரிசி பயிரிடும் பரப்பு 40 சதவீதம் உயரும்'**

புதுடில்லி:நடப்பு கரீப் பருவத்தில், பாசுமதி அரிசி பயிரிடும் மொத்த பரப்பளவு,

40 சதவீதம் அதிகரித்து, 35 லட்சம் ஹெக்டேராக உயரும் என, மத்திய வேளாண் ஆணையர் ஜே.எஸ்.சாந்து தெரிவித்தார். கடந்தாண்டு, இதே பருவத்தில், பாசுமதி அரிசி பயிரிடும் பரப்பு, 25 லட்சம் ஹெக்டேராக இருந்தது என்பது, குறிப்பிடத்தக்கது.ராஜஸ்தான்:குறிப்பாக, பாசுமதி அரிசி உற்பத்தியில் சிறந்து விளங்கும், பஞ்சாப், அரியானா, உத்தரகாண்ட், இமாச்சல் பிரதேசம், ஜம்மு – காஷ்மீர் ஆகிய மாநிலங்கள் தவிர்த்து, பாரம்பரியம் அல்லாத புதிய பகுதிகளான, மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களிலும், பாசுமதி அரிசி உற்பத்தி சிறப்பான அளவில் இருக்கும் என, எதிர்பார்க்கப் படுகிறது. நல்ல வருமானத்தை எதிர்பார்த்து, விவசாயிகள், உயர்வகை நெல் சாகுபடியில் அதிக கவனம் செலுத்தி வருகின்றனர்.பெரும்பாலான விவசாயிகள், புசா 1501 மற்றும் புசா 1121 பாசுமதி அரிசி வகைகளை பயிரிட்டு உள்ளனர். கடந்தாண்டில், இவ்வகை அரிசிக்கு நல்ல விலை கிடைத்தது. மதிப்பீட்டின் படி, நெல் பயிரிடும் பரப்பு இலக்கு எட்டப்படும் நிலையில், நடப்பாண்டில் மொத்த பாசு-மதி அரிசி உற்-பத்தி, 87.50 லட்சம் டன்னை எட்ட வாய்ப்புள்ளது. இதன்படி ஒரு ஹெக்டேருக்கான சராசரி விளைச்சல், 2.5 டன் என்ற அளவில் இருக்கும். கரீப் பருவம்:கடந்தாண்டில், பாசுமதி அரிசி உற்பத்தி, 62.50 லட்சம் டன்னாகவும், இதன் ஏற்றுமதி, 70 லட்சம் டன்னாகவும் இருந்தது என, சாந்து மேலும் தெரிவித்தார். நடப்பு கரீப்பருவத்தில், இதுவரையிலுமாக, பாசுமதி அரிசி உட்பட அனைத்து வகையான நெல் சாகுபடி பரப்பு, 3.35 கோடி ஹெக்டேராக அதிகரித்துள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 3.34 கோடி ஹெக்டேராக இருந்தது என, மத்திய அரசின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. நாட்டின் 90 சதவீத அரிசி உற்பத்தி, கரீப் பருவத்தில் மேற்கொள்ளப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.கரீப் பருவம் என்பது, ஒவ்வொரு ஆண்டும் தென்மேற்கு பருவமழையை யொட்டி, ஜூன் மாதம் முதற்கொண்டு துவங்குகிறது.

## <u>நிலவளம் காக்க தக்கை பூண்டு</u>

நிலவளத்தை காக்க விவசாயிகள் தக்கை பூண்டு சாகுபடி செய்ய வேண்டும் என, மதுரையின் சாதனை விவசாயி சோலைமலை தெரிவித்தார். விவசாய சாகுபடியில் நிலவளமே இன்றியமையாதது. பெரும்பாலான விவசாயிகள் ரசாயன உரத்தை பயன்படுத்துவதால், நிலவளம் குறைந்து போனது.

தக்கைபூண்டு, சணப்பு, கொழிஞ்சி போன்றவை பயிரிட்டு, மடக்கி உழுதால், நிலவளம் மேம்பட்டு, மற்ற பயிர்கள் நல்ல மகசூலை அளிக்கும் என்கிறார், மதுரை அண்டமான் விவசாயி சோலைமலை."தக்கை பூண்டு இயற்கையான பசுந்தாள் உரம். மேலும் வேப்ப இலை, எருக்கஞ்செடியையும் பயன்படுத்தலாம். ஆனால் அவற்றை வேறு இடங்களில் இருந்து சேகரிப்பது சிரமம். அதற்கு பதிலாக தக்கைபூண்டு போன்றவற்றை சாகுபடி செய்து, அதேநிலத்திற்கு உரமாக மாற்றலாம்.தக்கை பூண்டு விதை கிலோ ரூ.30க்கு கிடைக்கும். இதற்கு ரூ.15 மானியம் உண்டு. இதனை நிலத்தில் பயிரிட்டு பூக்கும் பருவத்தில் மடக்கி உழுதுவிட வேண்டும். அதன்பின், நெல், பயறு வகைகள், கடலை என எதனை சாகுபடி செய்தாலும் நல்ல பலன் கிடைக்கும். எனது நிலத்தில் தற்போது 5 ஏக்கரில் தக்கை பூண்டு சாகுபடி செய்துள்ளேன். கிடைக்கும் கொஞ்ச நீரை பயன்படுத்தியதில் செழித்து வளர்ந்துள்ளது. இதுபோன்ற இயற்கை உரத்தையும் பயன்படுத்தியே எக்டேருக்கு 20ஆயிரத்து 680 கிலோ நெல் கிடைத்து சாதனை விவசாயியாக மாறினேன். இதற்காக ஜனாதிபதி, முதல்வர் விருதுகள் எனக்கு கிடைத்தன. இவ்வாறு அவர் கூறினார்.விவசாய துணைஇயக்குனர் கனகராஜ் கூறுகையில், "ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் அந்த நேரத்தில் பயிருக்கு சத்து கிடைக்குமே தவிர, மண்வளம் அதிகரிக்காது. ஆனால் தக்கைபூண்டு போன்றவற்றை சாகுபடி செய்வதால் கார்பன், நைட்ரஜன் விகிதாச்சாரம் அதிகரித்து, மண்வளம் காக்கப்படும். கொழிஞ்சி செடியை தொடர்ந்து 3 ஆண்டுக்கு சாகுபடி செய்தால், பின் அது தானாகவே நிலத்தில் வளர்ந்து நிலவளத்தை காக்கும்" என்றார். தொடர்புக்கு: 93441 31977**ஜி.மனோகரன்,மதுரை.**

## <u>சின்ன சின்ன செய்திகள்</u>

கன்றுகளைத் தாக்கும் இரத்தக்கழிச்சல் நோய் மற்றும் தடுக்கும் முறைகள் : இரத்தக்கழிச்சல் இளங்கன்றுகளைத் தாக்கும் முக்கியமான ஒரு செல் ஒட்டுண்ணி நோயாகும்.**நோய்க்காரணி :** இந்நோய் பத்திற்கும் மேற்பட்ட எய்மீரியா என்ற ஒரு செல் ஒட்டுண்ணியால் ஏற்படுகிறது. அவற்றில் எய்மீரியா சுர்ணை எ.போவிஸ் மற்றும் எ.சிலிண்ட்ரிகா போன்ற ஒட்டுண்ணி வகைகளின் தாக்கம் அதிகமாக கன்றுகளில் காணப்படும்.**நோய்பரவும் விதம் :** இரத்தக்கழிச்சலால் பாதிக்கப்பட்ட கன்றின் சாணத்தில் எய்மீரியா

ஒட்டுண்ணிகளின் உறை முட்டைகள் வெளியேற்றப்படுகிறது. இந்த உறை முட்டைகள் சாதகமான சூழ்நிலை நிலவும் பட்சத்தில் 2 முதல் 10 நாட்களுக்குள் நோயுண்டாக்கும் நிலையை அடைந்து தீவனம் மற்றும் தண்ணீர் தொட்டி மற்றும் கொட்டகையின் பல இடங்களுக்கு பரவி விடும். ஆரோக்கியமான கன்றுகள் இந்த நோயுண்டாக்கும் நிலையை தீவனம் மற்றும் தண்ணீர் மூலமாக உட்கொள்ளும் போது நோய் தாக்கம் ஏற்படுகிறது.**நோய் கண்டறியும் முறை :** நோயின் முக்கிய அறிகுறிகளான குழி விழுந்த கண்கள், இரத்த சோகை, இரத்தம் சளி கலந்த தண்ணீர் போன்ற பீச்சியடிக்கும் வயிற்றுப்போக்கு காணப்படுவது, சாணப் பரிசோதனை செய்து எய்மீரியா உறை குட்டை உள்ளதா என கண்டறிவது.**நோயைத்தடுக்கும் முறை :** தீவனம் மற்றும் தண்ணீர் தொட்டிகளை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தீவனம் மற்றும் தண்ணீருடன் சாணம் கலக்காமல் இருக்க தொட்டியை சற்று உயரத்தில் வைக்க வேண்டும். சிறிய கொட்டகைகளில் அதிக கன்றுகளை அடைக்கக் கூடாது. பாதிக்கப்பட்ட கன்றுகளை தனியாக பிரித்து சிகிச்சை அளிக்க வேண்டும். சாணத்தை முறையாக அப்புறப்படுத்த வேண்டும். எய்மீரியா உறை முட்டைகளை அழிக்கும் கிருமிநாசினி (பினாயில் மற்றும் 5 விழுக்காடு பார்மலின்) கொண்டு கழுவி விட வேண்டும். (தகவல்: முனைவர் நா.ராணி, முனைவர் கு.பொன்னுதுரை, முனைவர் க.ரம்பா, முனைவர் ர.வேலுசாமி கால்நடை ஒட்டுண்ணியியல் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல்).**பாசன நீர் தன்மைக்கேற்ப தாங்கி வளரும் பயிர்கள்**

நீரின் குணம் நல்ல வடிகால் வசதி ஓரளவு வடிகால் வசதி குறைந்த வடிகால் வசதிநல்ல நீர் அனைத்துப்பயிர்கள் அனைத்துப்பயிர்கள் அனைத்துப்பயிர்கள் மிதமான உவர்நீர் காய்கறிகள், உருளைக்கிழங்கு, மனிலா வேலிமசால், வாழை, பூ வகைகள் மக்காச்சோளம், கம்பு, கொண்டைக்கடலை, எள், சூரியகாந்தி, குதிரைமசால், கேழ்வரகு கரும்பு, நெல்.நடுத்தர உவர்நீர் மிளகாய், தீவனச்சோளம், மக்காச்சோளம் - மாதுளை, கொய்யா, பப்பாளி, கோதுமை, சப்போட்டா இலந்தை, தீவனப்புற்கள், சப்போட்டா அதிக உவர்நீர் மிளகாய், மரவள்ளி, இலந்தை குதிரை மசால், கறிவேப்பிலை சோளம், கோதுமையின் சில இரகங்கள், பாராபுல், கொடுக்கட்டைபுல் சவுண்டல் மரம் மிக அதிக உவர்நீர் பருத்தி, தென்னை, சவுக்கு, நீர் புல், சுகர்பீட் தீக்குச்சி மரம், ஆச்சா மரம் கருங்காலி மரம், கருவேல மரம் அபரிமிதமான உவர்நீர் சுகர் பீட் வாகை மரம்

மிதமான களர் உவர்நீர் - முயல் மசால், தானியப்பயிர்கள், மல்பெரி பெர்முடாபுல், கர்னால் புல், கரும்பு பருத்தி நெல்லில் சில இரகங்கள் அதிக களர் உவர்நீர் ஜிப்சம் உபயோகித்து களரைக் குறைத்தப் பின் பயிரிடலாம். சுண்ணாம்பு நிறைந்த மண்ணில் கந்தகத்தை உபயோகிக்கலாம்.(தகவல் : முனைவர் டி.ஜெயந்தி, முனைவர் பா.சே.பாண்டியன், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்: 0422 - 661 1378, 661 1278).- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>கட்டழகு தரும் கறிவேப்பிலை சாகுபடி</u>

கட்டழகு தரும் கறிவேப்பிலையை சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும் என, மதுரை மாவட்டம் மேலூர் நீர்மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண்மை துணை இயக்குனர் ராஜேந்திரன் கூறியுள்ளார்.**அவரது அறிக்கை:** கறிவேப்பிலை உணவு செரிமானத்திற்கு உகந்தது. வைட்டமின் ஏ, சுண்ணாம்புச் சத்து, போலிக் அமிலம் உள்ளது. முதுமையில் எலும்புத்தாது அடர்த்தி குறைவு (ஆஸ்டியோபோரோசிஸ்) வராமல் பாதுகாக்கிறது. கெட்ட கொழுப்பை கரைத்து, உடலுக்கு கட்டழகை தருகிறது. பூச்சிக்கடி, ஒவ்வாமையால், தோலில் ஏற்படும் அரிப்பை தணிக்கிறது. கண்பார்வை கூர்மை, கருகரு தலைமுடிக்கு கறிவேப்பிலை சிறந்தது. கறிவேப்பிலையை பச்சையாக மென்று தின்றால் ரத்தத்தில் சர்க்கரை அளவு குறையும். தேங்காய் எண்ணெயுடன் காய்ச்சி தலைக்கு தேய்க்கலாம். இதனை அரைத்து, மோருடன் கலந்து குடித்தால், இளநரை மறையும். வறட்சியான வாந்திக்கு கறிவேப்பிலைச் சாறு, எலுமிச்சைச் சாறு, தேன் அல்லது சர்க்கரை கலந்து அருந்தலாம். கர்ப்பகால வாந்திக்கு, தலா ஒரு ஸ்பூன் அளவில் கறிவேப்பிலைச் சாறு, தேன் சேர்த்து குடித்தால் மாற்றங்கள் ஏற்படும்.இதில் செங்காம்பு, பச்சைக்காம்பு என 2 ரகங்கள் உள்ளன. அனைத்து பருவங்களிலும் சாகுபடி செய்யலாம். வடிகால் வசதியுள்ள மண் அவசியம். நீர் தேங்கினால் இலைகள் பழுத்து உதிரும். ஏக்கருக்கு 6500 முதல் 7000 நாற்றுக்கள் (8 கிலோ பழங்கள்) தேவைப்படும். நாற்றின் வயது 60-70 நாட்கள். 120 நாட்களுக்குள் நடவு செய்துவிட வேண்டும். குழி அளவு 45 செ.மீ., நீள, அகல, ஆழத்தில் இருக்க வேண்டும். செடிக்கு செடி 2.5 அடி நெருக்கி நடுவதன் மூலம் அதிக விளைச்சல் இருக்கும். இயற்கை உரம்

பயன்படுத்தினால் இயற்கை மணம், குணம் மாறாமல் இருக்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 2.75 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி

திருவள்ளூர் : திருவள்ளூர் மாவட்டத்தில், வரும் செப்.,1ம் தேதி முதல் 21ம் தேதி வரை, கோமாரி நோய் தடுப்பு முகாம், நடைபெற உள்ளது.திருவள்ளூர் மாவட்டத்தில், 2.75 லட்சம் கால்நடைகள் உள்ளன. மேலும், விலையில்லா கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், இதுவரை 3,200 பசுக்கள், 57,788 வெள்ளாடுகள், வழங்கப்பட்டுள்ளன.இந்த கால்நடைகளை, கோமாரி நோய் தாக்கத்திலிருந்து காப்பாற்ற, மாவட்டத்தில் உள்ள, 526 ஊராட்சிகளிலும், தடுப்பூசி முகாம், வரும் செப்.1ம் தேதி துவங்கி, 21ம் தேதி வரை நடைபெற உள்ளது.இந்த முகாம்களில், அனைத்து விவசாயிகளும் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து, தடுப்பு ஊசி போட்டு பயன்பெற வேண்டுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## யானைமுகனுக்கு படைக்க கம்பு, மக்காசோளம் அறுவடை

ஆர்.கே.பேட்டை : விநாயக சதுர்த்தியை ஒட்டி, யானைமுகனுக்கு படைக்க, கம்பு, மக்காசோளம், வேர்க்கடலை அறுவடை தீவிரமடைந்துள்ளது. சிறு வியாபாரிகள், விவசாயிகளிடம் நேரடி கொள்முதலில் ஈடுபட்டுள்ளனர்.நாளை மறுதினம், விநாயகர் சதுர்த்தி கொண்டாடப்பட உள்ளது. இதையடுத்து, யானைமுகனுக்கு படைக்க கம்பு கதிர், சோளக்கதிர், வேர்க்கடலை உள்ளிட்டவை அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.யானைமுகனுக்கு மிகவும் பிடித்தமான கம்பு கதிர், சோளக்கதிர், வேர்க்கடலை போன்றவை படைக்கப்படும். சதுர்த்தியை ஒட்டி, கம்பு, சோளக்கதிர், வேர்க்கடலை அறுவடை தீவிரமாக நடந்து வருகிறது. சிறு வியாபாரிகள், விவசாயிகளிடம் நேரடி கொள்முதலில் ஈடுபட்டுள்ளனர். தேவை அதிகரித்துள்ளதால், இளம் கதிர்களும், அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.இதையடுத்து, விவசாயிகள் உற்சாகமாக அறுவடையில் ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரம் மூன்று சோளக்கதிர், 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு கதிர், 10 ரூபாய் என, விற்பனை செய்யப்படுகிறது.வேர்க்கடலை ஒரு படி, 30 ரூபாய் வரை விற்பனை ஆகிறது.

## பார்த்தீனியம் ஒழிப்பு விழிப்புணர்வு முகாம்

உளுந்தூர்பேட்டை : உளுந்தூர்பேட்டை வேளாண் துறை சார்பில் பார்த்தீனிய ஒழிப்பு விழிப்புணர்வு முகாம் கூவாடு கிராமத்தில் நடந்தது.வேளாண் உதவி இயக்குனர் கருணாநிதி தலைமை தாங்கி விவசாயிகளுக்கு பார்த்தீனிய செடிகளை 2 சதவீதம் சோடியம் குளோரைடு கரைசல் மூலம் ஒழிக்கும் முறைகள் குறித்து எடுத்துரைத்தார். ஊராட்சி தலைவர் வெங்கடேசன் வரவேற்றார். வட்டார வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜ்வேளாண் விரிவாக்க அலுவலர் காமராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி; வெற்றிலை விலை கிடுகிடு உயர்வு

ப.வேலூர் :திருவிழா போன்ற விசேஷ தினங்களால், வெற்றிலை விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. அதனால், பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ப.வேலூர் காவிரி கரையோரப்பகுதிகளான வெங்கரை, பாண்டமங்கலம், பொத்தனூர், நன்செய் இடையாறு, பாலப்பட்டி, மணப்பள்ளி, மேலப்பேட்டப்பாளையம், மோகனூர் உள்ளிட்ட பகுதியில், 15 ஆயிரம் ஏக்கர் பரப்பில், வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, கற்பூரி, வெள்ளைக் கொடி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்யும் வெற்றிலைகளை, 104 கவுளிகள் அடங்கிய சுமை தயாரிக்கப்பட்டு, ப.வேலூரில் உள்ள தினசரி மார்க்கெட்டுக்கு, ஏலத்துக்கு கொண்டுவரப்படுகிறது. அவ்வாறு கொண்டுவரப்படும் வெற்றிலைகளை, நாமக்கல், சேலம், கரூர், மதுரை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுக்கின்றனர்.ஏலம் எடுக்கப்பட்ட வெற்றிலைகளை, தமிழகம் முழுவதும், கர்நாடகா, கேரளா மற்றும் மும்பை போன்ற வெளிமாநிலங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. விசேஷ நாட்களில் வெற்றிலை விலை உச்சத்தை அடைவதும், மற்ற காலங்களில் விலை குறைவதும் வாடிக்கை.தற்போது, விநாயகர் சதுர்த்தி போன்ற விசேஷ நாட்கள் துவங்கி உள்ளதால், வெற்றிலை விலை கிடு கிடுவென உயர்ந்துள்ளது. கடந்த வாரம், கற்பூரி இளம்பயிர், ஒரு சுமை, 3,000 ரூபாய்க்கு விலை போனது. இந்த வாரமும் அதன் விலையில் மாற்றம் இல்லாமல், அதே விலையான, 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.வெள்ளைக்கொடி இளம்பயிர், கடந்தவாரம், 3,000க்கு ஏலம் போன, ஒரு சுமை, நேற்று, 4,500 ரூபாய்க்கு ஏலம் போனது.

அதேபோல், முதிகால், கடந்த வாரம், 2,000க்கு விற்பனையானது. ஆனால், இந்த வாரம், ஒரு சுமை, 3,000 ரூபாய்க்கு ஏலம் போனது. இந்த விலை உயர்வால், பயிரிட்டுள்ள விவசாயிகளை மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இந்த விலை உயர்வு, விநாயகர் சதுர்த்தி முடியும் வரை தொடரும் என, விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல்:"ஆகஸ்ட், 28ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது' என, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், ஆகஸ்ட், 28ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை வகிக்கிறார். இக்கூட்டத்தில் விவசாயிகள் பங்கேற்று, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்வதுடன், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மஞ்சள் ஏலம்: ரூ. 60 லட்சத்துக்கு விற்பனை

ராசிபுரம் :நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடந்தது. ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,560 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,122க்கும், குறைந்த பட்சம், 5,990 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,690க்கும், குறைந்த பட்சம், 5,839 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 13,633க்கும், குறைந்த பட்சம், 9,899 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது. ராசிபுரம் :நாமகிரிப்பேட்டை வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது.நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் ஏலம் நடந்தது. ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,560

மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 7,122க்கும், குறைந்த பட்சம், 5,990 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,690க்கும், குறைந்த பட்சம், 5,839 ரூபாய்க்கும் ஏலம்போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 13,633க்கும், குறைந்த பட்சம், 9,899 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## <u>கால்நடை வளர்ப்பு தொழில் புத்துயிர்</u>

ஓசூர்: ஓசூர் அருகே, கடும் வறட்சி காரணமாக, தீவன புல் இல்லாமல், தரிசு நிலமாக மாறிய கால்நடை பண்ணையில், தற்போது கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழை காரணமாக, கால்நடைகளுக்கு தேவையான தீவன புற்கள் முளைத்துள்ளன.ஓசூரை அடுத்த மத்திகிரியில், ஆசியாவிலேயே மிகப்பெரிய கால்நடை பண்ணை உள்ளது. சுமார் 1,641.41 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த பண்ணை, 1924 ம் ஆண்டு, கால்நடை இனப்பெருக்க மையமாக, வேளாண்மை துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர், 1970 ம் ஆண்டு, கால்நடை பண்ணையாகவும், அதைத்தொடர்ந்து, கால்நடை ஆய்வு மையமாகவும், மாற்றப்பட்டது. இந்த பண்ணையில், உயர்தர மாடுகள் மற்றும் ஆடுகள் வளர்க்கப்படுகிறது. மேலும், புதிய வகை கலப்பின மாடுகள், ஆடுகள் உருவாக்கப்பட்டு, விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதுதவிர, கால்நடைகளுக்கு தேவையான, தீவனங்கள் உற்பத்தி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கடந்த இரு ஆண்டுகளாக, வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை முற்றிலும் பொய்த்து போனதால், கடும் வறட்சி நிலவி வந்தது.இதனால், ஓசூரை அடுத்த மத்திகிரியில் உள்ள, கால்நடை பண்ணையில் பராமரிக்கப்படும் மேய்ச்சல் நிலம், தீவன புல் இல்லாமல், தரிசு நிலமாக மாறியது. இதன் காரணமாக, கால்நடை வளர்ப்பு தொழில் மற்றும் உற்பத்தி மந்தமடையும் சூழ்நிலை உருவானது. இந்நிலையில், மத்திகிரி பகுதியில் கடந்த ஒரு வாரமாக, அவ்வப்போது மழை பெய்து வருவதால், தரிசு நிலமாக மாறிய மேய்ச்சல் நிலத்தில், தீவன புற்கள் முளைத்துள்ளன. இதனால், கால்நடை வளர்ப்பு தொழில் புத்துயிர் பெற்றுள்ளது.

## <u>வேளாண் கருவிகள் வழங்கல்விவசாயிகளுக்கு அழைப்பு</u>

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் பயன்பாட்டுக்காக டீஸல்

இன்ஜின் மற்றும் தெளிப்பு நீர்பாசன கருவிகள் இலவசமாக வழங்க உள்ளதால் தேவைப்படும் விவசாயிகள் இதனை பயன்படுத்தி கொள்ளலாம்.இதுகுறித்து, வேளாண்மை பொறியியல் துறை அதிகாரிகள் தெரிவித்ததாவது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் உயிர் நீர் பாசன தேவைக்காக, ஒன்பது டீசல் இன்ஜின் பம்பு செட்டுகள் மற்றும் ஒன்பது தெளிப்பு நீர்பாசன கருவிகள் வழங்கப்பட உள்ளது.விவசாயிகள் தங்கள் பயிர்களின் உயிர் நீர் பாசன தேவைக்காக, டீசல் இன்ஜின் பம்பு செட்டு மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகளை இலவசமாக பயன்படுத்தி கொள்ளலாம். கருவிகளை இயக்குவதற்கு தேவைப்படும் டீசல் மற்றும் கருவிகளை எடுத்து சென்று உபயோகப்படுத்தி, பின் மீண்டும் அந்த கருவிகளை அலுவலகத்தில் கொண்டு சேர்ப்பதற்கான செலவு, விவசாயிகளை சேர்ந்ததாகும்.உயிர் நீர் பாசனத்துக்காக டீசல் இஞ்சின் பம்பு செட் மற்றும் தெளிப்பு நீர் பாசன கருவிகளை இலவசமாக பயன்படுத்த விரும்பும் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய தாலுகாக்களை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, 43, செட்டியம்பட்டி சாலை, அம்பேத்கார் நகர், கிருஷ்ணகிரி,' என்ற முகவரியிலும், ஓசூர் தேன்கனிக்கோட்டை ஆகிய தாலுகாக்களை சேர்ந்த விவசாயிகள், "உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ராயக்கோட்டை சாலை, சென்னசந்திரம், ஓசூர்' என்ற முகவரியிலும் நேரில் அணுகலாம். கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி கொள்ளலாம், என்றனர்.

## கரும்பு ஆராய்ச்சி மற்றும்அலுவலர்கள் கூட்டம்

திருச்சி :தமிழ்நாடு மற்றும் புதுவை கரும்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அலுவலர்கள் கூட்டம், திருச்சியில் நடந்தது.கூட்டத்தில், தமிழ்நாடு அரசு சர்க்கரை துறை கூடுதல் இயக்குனர் சங்கரலிங்கம், கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல் தலைவர் சில்வர்ஸ் டார்ஸ்கோல்டுவின் ஆகியோர், சிறப்பு மலரை வெளியிட்டு பேசினர்.தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு தலைவர் பிரபாகரன், கூடுதல் இயக்குனர் ஆரோன், கோவை கரும்பு அபிவிருத்தி நிலைய இயக்குனர் விஜய்நாயர், கோத்தாரி சுகர்ஸ் மற்றும் கெமிக்கல் லிமிடெட் பொது மேலாளர் ராமசந்திரன், துணை மேலாளர் சத்திய நாராயணன் உள்பட பலர் வளர்ச்சி கூட்டத்தில் பங்கேற்றனர்.

## தேங்காய் பருப்பு விலை உயர்வுதென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

வேலாயுதம்பாளையம்:கரூர் மாவட்டத்தில், தேங்காய் பருப்பு விலை உயர்ந்துள்ளதால், தென்னை விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.கரூர் மாவட்டம், குளத்துப்பாளையம், வேட்டமங்கலம், குந்தானிப்பாளையம், ஓரம்புப்பாளையம், ஓலப்பாளையம், நல்லிக்கோவில், கவுண்டன்புதூர், திருக்காடுதுறை, கொங்குநகர், வடிவேல் நகர், புகழூர், தோட்டகுறிச்சி, கடம்பங்குறிச்சி உள்ளிட்ட பகுதிகளில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதியில் விளையும் தேங்காய்களை உலர வைத்து, பருப்பு விற்பனை செய்கின்றனர். வியாபாரிகள், தேங்காய் பருப்புகளை, நொய்யல் அருகிலுள்ள சாலைப்புதூரில் செயல்பட்டு வரும் வேளாண் விற்பனை மையத்தில் விற்பனை செய்கின்றனர். பல்வேறு மாவட்டங்களில் உள்ள பிரபல எண்ணெய் நிறுவனங் களிலிருந்து ஏஜன்ட்களும், வியாபாரிகளும் தங்களுக்கு கட்டுப்படி யாகும் விலைக்கு வாங்கிச் செல்கின்றனர்.கடந்த வாரங்களில், 1,000 கிலோ தேங்காய் பருப்பு, ஒரு லட்சத்துக்கு விற்பனையானது. இந்த வாரம், 1,000 கிலோ தேங்காய் பருப்பு, ஒரு லட்சத்து, 20 ஆயிரம் ரூபாய் வரை விற்பனையானது. தேங்காய் உற்பத்தி குறைந்துள்ள நிலையில், தேங்காய் பருப்பு மற்றும் தேங்காய் விலை உயர்வு காரணமாக, தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## மூலிகைப் பண்ணை விரிவாக்கம்பல்கலை துணைவேந்தர் தகவல்

தஞ்சாவூர் :சுற்றுச்சூழல், மூலிகை அறிவியல் துறை சார்பில், "மாறும் சூழலும், சுற்றுச்சூழல் கல்வியின் அவசியமும்' என்ற தலைப்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான ஒரு நாள் பயிற்சி முகாம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் நடந்தது. இதில், துணைவேந்தர் திருமலை தலைமை வகித்து பேசியதாவது:தமிழ் பல்கலைக்கழகம், 865 ஏக்கர் பரப்பளவு கொண்டது. இங்கு ஏற்கெனவே, 7 ஏக்கரில் மூலிகைப் பண்ணை இருந்தது. காலப்போக்கில் பயனற்றதாகி விட்டது. இதை மீண்டும் உயிர்ப்பிக்க, எட்டு லட்சம் ரூபாய் செலவில் ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 25 ஏக்கராக மூலிகை பண்ணையை விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மேட்டுப்பாளையத்தில் உள்ள வனவியல் கல்லூரியிலிருந்து, 1,000 மரக்கன்றுகள் விரைவில் பெறப்படவுள்ளன. அதில், 100 மரக்கன்றுகள்

பல்கலைக்கழக வளாகத்தில் நடப்படவுள்ளன. இவற்றில், செம்மரக்கன்றுகள் அதிக அளவில் இருக்கும். இந்த மரங்கள் மூலம், 15 ஆண்டுகளில் தலா, 15 லட்சம் வருவாய் கிடைக்கும். இதற்காக, தமிழ்நாடு காகித நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. இந்த மரக்கன்றுகள் நடுவதற்கான குழிகள் தோண்டப்பட்டுள்ளன. செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் நடப்படவுள்ளன.இது தொடர்பாக நடத்தப்படும் விழாவில், பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் இலவசமாக வினியோகம் செய்யப்படவுள்ளன. மேலும், பள்ளிக்கு, மூன்று மரக்கன்றுகள் வீதம், மாவட்டத்தில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் வினியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவித்தார்.முகாமில், முதன்மைக் கல்வி அலுவலர் தமிழரசு, மாவட்டக் கல்வி அலுவலர் ரங்கநாதன், பல்கலைக்கழக அறிவியல் புலத்தலைவர் பாஸ்கரன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## 12 ஆயிரம் ஏக்கராக சாகுபடி பரப்பளவு .. உயர்வு... வாழைக்கு மாறும் கரும்பு விவசாயிகள்

தேனி :கரும்பு விவசாயிகள் வாழை சாகுபடிக்கு மாறி வருவதால், வாழை சாகுபடி பரப்பளவு மாவட்டத்தில் 12 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. தேனி மாவட்டத்தில் கரும்பு சாகுபடி பரப்பளவு 20 ஆயிரம் ஏக்கருக்கும் மேல் உயர்ந்தது. பருத்தி சாகுபடி செய்த விவசாயிகள் அனைவரும் கரும்புக்கு மாறினர். காலப்போக்கில் விவசாயிகளுக்கு கரும்பு கசந்து விட்டது. தற்போது கரும்பு ஒரு டன்னுக்கு வெட்டுக்கூலி 700 ரூபாயாக உயர்ந்துள்ளது. உற்பத்தி செலவு 700 ரூபாய் ஆகிறது. லாரிவாடகை இதர செலவு 100 ரூபாய் ஆக ஒரு டன் கரும்புக்கு 1500 ரூபாய் முதல் 1600 ரூபாய் செலவாகி விடுகிறது. மாநில அரசு தனது மானியத்தை கடந்த 2012ம் ஆண்டு முழுவதும் வழங்கவில்லை. எனவே விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு சராசரியாக 600 முதல் 700 ரூபாய் வரை மட்டுமே வருவாய் கிடைத்தது. ஒரு ஏக்கருக்கு 50 முதல் 60 டன் வரை விளைச்சல் கிடைக்கிறது. இந்த கணக்குப்படி ஒரு ஆண்டில் ஒரு ஏக்கரில் சாகுபடி செய்த கரும்புக்கு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே லாபம் கிடைக்கிறது. இந்த பணமும் கைக்கு வந்து சேர பல மாதங்கள் ஆகும். அதிக லாபம்: வழைத் தார் 375 முதல் 500 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. தோட்டத்திற்கே வந்து வெட்டி எடுத்துச் செல்கின்றனர். ஒரு ஏக்கரில் ஆயிரத்து

200 கன்றுகள் வளர்த்தாலும், ஆயிரம் கன்றுகள் கைக்கு வந்து சேரும். ஆக வருமானம் 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் முதல் நான்கு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்து விடுகிறது. இதில் செலவு போக விவசாயிகளுக்கு குறைந்த பட்சம் 3.20 லட்சம் ரூபாய் வரை அதிக லாபம் கிடைக்கிறது. இந்த பணமும் உடனே கைக்கு வந்து சேர்ந்து விடுகிறது. இந்த காரணங்களால் கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் பலரும் வாழைக்கு மாறி வருகின்றனர். இதனால் 3500 ஏக்கர் முதல் 4000 ஏக்கராக இருந்த வாழை சாகுபடி பரப்பளவு தற்போது 12 ஆயிரம் ஏக்கராக உயர்ந்துள்ளது. ஆனால் 20 ஆயிரம் ஏக்கராக இருந்த கரும்பு சாகுபடி பரப்பளவு 14 ஆயிரம் ஏக்கருக்கும் கீழே குறைந்து விட்டது. கரும்புக்கான கொள்முதல் விலையை மத்திய, மாநில அரசுகள் உயர்த்தி வழங்காவிட்டால், மேலும் பல நூறு விவசாயிகள் கரும்பு சாகுபடியை கைவிடும் நிலை உள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**1.54 லட்சம் டன் கோதுமை ஆன்லைன் மூலம் விற்பனை**

புதுடெல்லி: இந்திய உணவு கழகம் எலக்ட்ரானிக் ஸ்பாட் எக்ஸ்சேஞ்ச் வாயிலாக ஆன்லைன் முறையில் நடப்பு ஆண்டில் 1 கோடி டன் கோதுமையை மில் உரிமையாளர்களுக்கு விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது. இதன்படி ஆன்லைன் ஏலம் முறையை இந்த மாதம் 7ம் தேதி செயல்படுத்தியது. கடந்த 21ம் தேதி வரை 3 முறை ஏலம் விட்டதில் 1.54 லட்சம் டன் கோதுமை விற்கப்பட்டுள்ளதாகவும், விற்பனை அளவு 76 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் இந்திய உணவு கழகம் தெரிவித்துள்ளது. இதில் ரகத்துக்கு ஏற்ப குவிண்டால் ரூ.1,500 முதல் ரூ.1,836 வரை மில் உரிமையாளர்கள் ஏலம் எடுத்துள்ளனர்.

## மல்பரி செடி சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.14 ஆயிரம் மானியம்

உடுமலை, :பட்டுக்கூடு வளர்ப்பு தொழிலில் மல்பரி செடி சாகுபடிக்கு ஏக்கருக்கு ரூ.14 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது என மாவட்ட கலெக்டர் கூறினார்.உடுமலை பட்டு வளர்ச்சி துறை சார்பில், குடிமங்கலத்தில் பட்டுக்கூடு வளர்ப்பு குறித்த கலந்துரையாடல் கூட்டம் நடந்தது. ஆராய்ச்சி விரிவாக்க மைய நிபுணர் புனிதவதி தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் பேசியதாவது:உடுமலை, மடத்துக்குளம், குடிமங்கலம் ஆகிய பகுதிகளில் வெண்பட்டுக்கூடு வளர்ப்பு தொழிலில் 1500க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இந்த ஆண்டு இப்பகுதியில் 800 ஏக்கரில் மல்பரி செடிகள் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மல்பரி செடி சாகுபடி செய்ய ஏக்கருக்கு ரூ.14 ஆயிரம், பட்டுக்கூடு வளர்ப்புக்கு ரூ.2.75 லட்சம் மானியம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் அந்தந்த பகுதியில் உள்ள விவசாய உதவி இயக்குனர்களை சந்தித்து இதுகுறித்து கலந்து பேசி பயன்பெற வேண்டும். இவ்வாறு கலெக்டர் பேசினார். கூட்டத்தில், நிபுணர்கள் நாகராஜன், சமுத்திரவேல், டாக்டர் பாபு, அன்பழகன், சந்திரசேகரன், ஜனார்த்தனன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் அதிகாரி மாரப்பன் நன்றி கூறினார்.சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்அனுப்பர்பாளையம், : அவிநாசி போக்குவரத்து போலீசார் மற்றும் திருப்பூர் வடக்கு மாவட்ட மனித உரிமைகள் கழகம் சார்பில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம் அவிநாசியில் நேற்று நடைபெற்றது. முகாமிற்கு டி.எஸ்.பி. ராமசாமி தலைமை தாங்கி, அவிநாசி புதிய பஸ் ஸ்டாண்ட் அருகே வாகனங்களின் முகப்பு விளக்கிற்கு ஸ்டிக்கரை ஒட்டி முகாமை துவக்கி வைத்தார். போக்குவரத்து போலீஸ் இன்ஸ்பெக்டர் சண்முகம், எஸ்ஐக்கள் முரளி, சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மனித உரிமைகள் கழக துணை பொதுச்செயலாளர் செல்வராஜ், மாவட்ட அமைப்பாளர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் விஜயகுமார், மாவட்ட பொறுப்பாளர் ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், ஆட்டோ, வேன், லாரி, பஸ் உள்ளிட்ட வாகனங்களின் முகப்பு விளக்குகளுக்கு கருப்பு ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது. மேலும் போக்குவரத்து விழிப்புணர்வு அடங்கிய 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது. இதில், ஹெல்மெட் அணிந்தும், சீட் பெல்ட் அணிந்தும்

வாகனம் ஓட்ட வேண்டும், மது அருந்தியும், செல்போன் பேசி கொண்டும் வாகனம் ஓட்டக் கூடாது மற்றும் இருசக்கர வாகனத்தில் இருவருக்கு மேல் செல்லக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டது. முகாமில், ஆட்டோ, வேன், சுற்றுலா பஸ் ஓட்டுநர்கள் உள்பட 200க்கும் மேற்பட்டோர் பங்கேற்று பயனடைந்தனர்.

**<u>கூட்டுறவு சங்கத்தில் கறவை மாடு வாங்க கடன்</u>**

ஆலங்குடி, : ஆலங்குடியை அடுத்த கொத்தமங்கலத்தில் இரண்டு மகளிர் விவசாயகூட்டுப் பொறுப்பு குழுக்களுக்கு ரூ.3,75 லட்சம் கறவை மாடு வாங்க மத்திய கால கடனாக வழங்கப்பட்டது. கொத்தமங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிகழ்ச்சிக்கு மத்திய கூட்டுறவு வங்கி களமேலாளர் சந்திரசேகரன் தலைமை வகித்தார். கொத்தமங்கலம் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தலைவர் சேகர் துணைத் தலைவர் ராமநாதன், இயக்குனர்கள், வங்கி செயலாளர் மணிமேகலை ஆகியோர் முன்னிலையில் இக்கடன் வழங்கப்பட்டது.

**<u>மருத்துவ காப்பீடு திட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களும் பயன்பெறலாம் நாகை கலெக்டர் அறிவிப்பு</u>**

நாகை,: உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர்களும் மருத்துவ காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம் என்று நாகை கலெக்டர் அறிவித்துள்ளார். நாகை மாவட்டத்தில் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2.50 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் சொந்தமாக வைத்திருந்து, அந்த நிலத்தில் நேரடியாக பயிர் செய்யும் 18 வயது முதல் 65 வயது வரை உள்ள அனைத்து சிறு, குறு விவசாயிகள் மற்றும் விவ சாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 வயது முதல் 65 வயது உள்ள அனைத்து குத்தகைதாரர்கள் மற்றும் தொழிலாளர் கள் மூல உறுப்பினர்களா கவும், அவர்களை சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள், உறுப்பினர் களாகவும் ஏற்கெனவே கணக்கெடுப்பு செய்து பதிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பணி கடந்த 2011-12ம் ஆண்டில் நடைபெற்றது. விஏஓவினரால் பராமரிக்கப்பட்டு வரும் உறுப்பினர்கள் கணக்கீடு செய்த பதிவேட்டின்படி பயனாளிகளுக்கு பலவகையான பயன்கள் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயனடையாத தகுதி உள்ள நபர்களை இத்திட்டத்தில்

பயனடைய செய்யும் வகையில் மீண்டும் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. தற்போது ஏற்கெனவே கணக்கெடுப்பு செய்து உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளவர்களையும் அவர்களது குடும்பத்தினரையும் தற்போது புதிதாக கணக்கெடுப்பு செய்து புதிதாக சேர்க்கப்பட்டு வருபவர்களையும் விஏஓவினருடன்இணைத்து மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க தற்போது அனைத்து கிராமங்களிலும் மருத்துவ காப்பீடு அட்டை வழங்கும் பணி நடைபெற உள்ளது. எனவே, உழவர் பாதுகாப்புத்திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ள அனை வரும் தத்தம் பகுதியில் உள்ள விஏஓவினரை அணுகி மருத்துவ காப்பீட்டுத்திட்டத்தை செயல்படுத்தும் யுனைடெட் இந்தியா காப்பீட்டு நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப் பாளருடன் இணைந்து விரிவாக மருத்துவ காப்பீட்டு அட்டை பெற்று கொள்ள லாம். உடனடியாக மருத்துவ காப்பீட்டு அட்டை தேவைப்படுபவர்கள் மற்றும் கிராமத்தில் புகைப்படும் எடுக்கும்போது விடுபட்டவர்கள் அனைவரும் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தரைத்தளத்தில் அறை எண் 24ல் புகைப்படம் எடுத்து மருத்துவ காப்பீடு அட்டை பெற்று கொள்ளலாம் என கலெக்டர் முனுசாமி அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

**கொள்ளிடம் வட்டாரத்தில் 50% மான்யத்தில் விதை நெல் விநியோகம் வேளாண் உதவி இயக்குநர் தகவல்**

கொள்ளிடம்,: விதை கிராமத்திட்டத்தின் கீழ் 50 சதவிகித மான்யத்தில் விதை நெல் விநியோகிக்கப்படுகிறது. என்று கொள்ளிடம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் தெரிவித்தார்.நாகை மாவட்டம், கொள்ளிடம் அருகே மகேந்திரப்பள்ளி கிராமத்தில், சம்பா சாகுபடி முனைப்பு இயக்கத்தின் விதை கிராம திட்டத்தின்கீழ் 50 சதவிகித மான்யத்தில் விதை நெல் விநியோக துவக்க விழா நேற்று நடைபெற்றது. ஊராட்சி தலைவர் பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சிவபாலன் வரவேற்றார். வட்டார வேளாண் அலுவலர்கள் கலியபெருமாள், சதீஷ்குமார் முன்னிலை வகித்தனர். கொள்ளிடம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் பால்ராஜ் பேசும்போது; சம்பா விதைப்புக்கு தேவையான விதை நெல் ரகங்களான சாவித்திரி, ஆடுதுறை 38, மற்றும் பி.பி.டி.5204 ஆகிய சான்று விதைகளுக்கு, வேளாண் விரிவாக்க மையங்கள் மூலமாக 50 சதவிகித மானியத்தில் விநியோகம் செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆடுதுறை 46 விதைகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒரு கிலோ விதைக்கு ரூ.10 வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. சம்பா விதை நெல் ரகத்தேர்வு தரமான சான்று பெற்ற

விதையாக இருக்க வேண்டும். விதை நேர்த்தி செய்து, விதைக்க வேண்டும். விதைப்பு செய்த 15ம் நாளில் நாற்றுப்பறித்து, இயந்திரம் மூலமாகவோ, கைநடவு முறைப்படியோ, திருந்திய நெல்சாகுபடி முறைப்படி நடவு செய்ய வேண்டும் என்றார். உதவி வேளாண் அலுவலர்கள் சந்திரசேகர், ராமச்சந்திரன், ஆத்மா திட்ட அலுவலர் ரேகா மற்றும் விவசாயிகள் வேளாண் அலுவலர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர். வேளாண் உதவி அலுவலர் வேதையராஜன் நன்றி கூறினார். இதேபோல் 50 சதவிகித மானியத்தில் விதைநெல் விநியோகம் செய்யும் நிகழ்ச்சி சோதியக்குடியில் ஊராட்சி தலைவர் தமிழரசி அய்யாசாமி தலைமையிலும், ஆலாலசுந்தரம் கிராமத்தில் ஊராட்சி தலைவர் ஜெயமங்கலேஸ்வரி தலைமையிலும் நடைபெற்றது.

**எண்ணெய் வித்து பயிர்களில் செய்நேர்த்தி மூலம் அதிக விலை பெறலாம் வேளாண் அதிகாரிகள் தகவல்**

சிவகாசி, : எண்ணெய் வித்துபயிர்களில் செய்நேர்த்தி முறைகள் முலம் அதிக விலை பெறலாம் என வேளாண்மைதுறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். மாவட்டத்தில் தற் போது நிலக்கடலை. எள். மற்றும் சூரியகாந்தி போன்ற எண்ணெய் வித்து பயிர்கள் அதிக அளவில் பயிர் செய்யப்படுகிறது. எண்ணெய் வித்து பயிர்களில் எண் ணெய் அளவு குறைந்து தரம் கெடாமல் பாதுகாத்து அறுவடைகடு பின் செய்நேர்த்தி முறை களை கடைபிடிப்பது அவசியம். நிலக்கடலை செடிகளை 90 முதல் 110 வது நாள் கழிதது அறுவடைசெய்ய வேண்டும். கடலை செடி களை பிடுங்கி காய்களை பறித்து 8 மணிநேரம் காய வைக்க வேண்டும். 2 மணிநேரத்திற்கு ஒரு முறை காய்களை கிளரி விடவேண்டும். இந்த நிலகடலைகளில் 7 முதல் 11 சதவீதம் வரை ஈரப்பதம் இருகக வேண்டும். பின்னர் சுத்தம் செய்யப்பட்ட நிலக்கடலைகளை முடைகளில் சேகரித்து தரையில் மரச்சட்டங்களின் மேல் அடுக்கி வைககவேண்டும். இந்த நிலக்கடலையின் பருப்பை எடுத்து சத்தம் செய்து விற்பனை செய்தால் அதிக விலை பெறலாம். இதேபோன்று சூரியகாந்தி பயிரின் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாக மாறி பூக்கொண்டைகள் பழுப்பு நிறமாக மாறியபின் அறுவடை செய்திடவேண் டும். இவ்வாறு உள்ள சூரியகாந்தி பயிரின் விதைகளை சோதித்து பார்த்தால் மேல்புறம் கருமையானதாகவவும், உள்புறம் வெள்ளை நிறமாகவும் இருககும். சூரியகாந்தியின் பூத்தலைகளை மட்டும் அறு வடை செய்து ஒரே சிராக பரப்பி களத்தில் காயவைக்கவேண்டும். இந்த பயிர் களை 3 மணிநேரத்திற்கு திருப்பி

விட வேண்டும். காய்ந்த பூக்களின் மணி களை கதிர் அடிக்கும் இயந்திரம் அல்லது தடிகள் கொண்டு பிரித்து எடுக்க வேண்டும். இந்த மணிகளை ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் தரம் பிரித்து நல்ல விலையில் விற்பனை செய்யலாம். எள் பயிர்களை அறு வடை செய்யும் போது செடி யின் கீழ் பகுதி இலைகள் 25 சதவிதம் உதிர்ந்து மேலே உள்ள இலைகள் மற்றும் தண்டு பகுதி மஞ்சள் நிறமாக இருக்கவேண்டும். மேலும் எள் காய்கள் பாதி அளவு மஞ்சள் நிறம் அடைந்து விட்டால் பயிர் அறுவடைக்கு ஏற்றதாகும். எள்பயிரின் கீழ் பகுதியில் இருந்து 10 வது காயை உடைத்து பார்த்தால் உள்ளே இருக்கும் விதைகள் கறுப்பாக மாறி இருந்தாலும் அறிவடை செய்து விடலாம். எள் பயிரை தரைமட்டத்தில் அறுத்து எடுக்கவேண்டும். செடியின் மேல்பகுதியை உள்புறமும், அடிப்பகுதி வெளிபுறமாகவும், வட்ட வடிவமாக திறந்த வெளியில் அடுக்கி வைக்க வேண்டும். இவ்வாறு அடுக்கி வைக்கப்பட்டுள்ள எள்செடிகள் ஒட்டுமொத்தமாக முதிர்ச்சி அடைய மேல் பகுதியில் வைக்கோல் போட்டு மூடிவைக்க வேண்டும். பின்னர் 3 நாட்கள் கழித்து எள் பயிரை எடுத்து களத்தில் காய போட வேண்டும் 3 முதல 5 நாட்கள் வரை காய வைத்த பின் விதைகளை தனியே பிரித்து எடுக்க வேண்டும். இவ்வாறு செய்நேர்த்தி செய்யப்பட்ட 1 லிட்டர் எள் விதையின் எடை 630 கிராம் வரை இருககும். இது நல்ல தர மான விதையாகும் இவற்றிற்கு அதிகவிலை கிடைக்கும் இவ்வாறு வேளண்மை துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**களை கொல்லி மருந்து விற்பனை கிராமங்களில் ஊழியர்கள் முகாம்**

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவிலில் சம்பா சாகுபடிக்கு என விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்த பகுதியில் ஒவ்வொரு ஆண்டும் நேரடி நெல் விதைப்பு பணிகள் மிக தீவிரமாக நடைபெறுவது வழக்கம். கோடைக் காலங்களில் பல்வேறு முறை உழவு செய்து களைகளை அகற்றி அதன் பிறகு நேரடி நெல் விதைப்பு செய்வர். நேரடி நெல் விதைப்பில் நெற்பயிர்கள் வளர்ந்த உடன் களைகள் உண்டாவது வழக்கம். இந்த களைகளை பெண் தொழிலாளர்களை கொண்டு வயல்களிலிருந்து அப்புறப்படுத்துவர். தற்போது பெண் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் அதிகமாக உள்ளது. இதனால் கடந்த ஆண்டு விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களில் களைகளை அகற்ற களை கொல்லி மருந்தை பயன்படுத்தினர். இதன் காரணமாக ஆட்கள் கூலி முற்றிலும்

தவிர்க்கப்பட்டது. விவசாயிகளுக்கு வயல்களை பராமரிக்கும் செலவும் குறைந்தன. இதை கருத்தில் கொண்டு இந்த ஆண்டும் அதிகம் பேர் நேரடி நெல் விதைப்பு செய்து வருகின்றனர். இதன் அடிப்படையில் களை கொல்லி மருந்துகள் தயாரிக்கும் கம்பெனிகளின் ஊழியர்கள் கிராமங்களுக்கு சென்று தங்கள் கம்பெனியின் மருந்துகளை பயன்படுத்த சிபாரிசு செய்து வருகின்றனர். இதனால் பெரும்பாலான கிராமங்களில் களை கொல்லி மருந்துகளை தயாரிக்கும் கம்பெனி ஊழியர்களே அதிகம் காணப்படுகின்றனர். துண்டு பிரசுரங்கள் ஒலிப்பெருக்கிகள் மூலம் விளம்பரம் செய்தல் ஆகிய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. மருந்து கம்பெனி ஊழியர்கள் தங்கள் மருந்துகளை பயன்படுத்தும் விவசாயிகளின் பெயர் மற்றும் நெற்பயிர் இடப்பட்ட பரப்பு ஆகியவற்றை குறித்து கொண்டு தேவையான மருந்துகளை குறைந்த விலையில் தருவதாக கூறி வருகின்றனர். இதனால் கிராமங்களில் களை கொல்லி மருந்துகளின் தாக்கம் விவசாயிகள் இடையே அதிகரித்து வருவதாககூறப்படுகிறது.

**<u>கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு பயிற்சி</u>**

ஊட்டி, : ஊட்டி அருகேயுள்ள பி.மணியட்டி கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு குறித்த பயிற்சி நடைபெற்றது. ஊட்டி வட்டார தேசிய வேளாண்மை விரிவாக்கம் மற்றும் தொழில்நுட்ப இயக்கம், மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை ஆகியவை சார்பில் விவசாயிகளுக்கு செயல்முறை பயிற்சி பி.மணி யட்டி கிராமத்தில் நடந்தது. இதில், கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு குறித்த பயிற்சி நடைபெற்றது. கால்நடை மருத்துவர் விநாயகம், கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் குறித்தும் அதற்கு தடுப்பூசி போடுவதன் அவ சியம் குறித்தும் பேசினார். மேலும் இளங்கன்று குட்டி பராமரிப்பு முறை, சுகாதாரமான முறையில் பால் கறவை செய்யும் முறை, செயற்கை கருவூட்டல் முறை மற்றும் குடல்புழு நீக்கம், மடிவீக்க நோய் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். சிகிச்சைக்காக கொண்டு வரப்பட்ட 50க்கும் மேற் பட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. இதில் பி.மணியட்டி ஊர் தலைவர் அசோகன், கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் பீம்ராஜ், வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரம்யா, உதவி தொழில்நுட்ப மேலாளர் ஜான்பாஸ்கோ மற்றும் பொதுமக்கள், கால்நடைகள் வளர்க்கும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து

கொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உழவனின் நண்பன் ஜோகன் செய்திருந்தார்.

**ரூ. 28 லட்சம் மானியத்தில் 699 விவசாயிகளுக்கு விதை, இடுபொருட்கள் அதிகாரி தகவல்**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் 699 விவசாயிகளுக்கு ரூ. 28 லட்சம் மானியத்தில் மக்காச்சோளம்-பருத்தி விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட உள்ளது என்று நீர்வடி மேம்பாட்டு முகமை உதவி இயக்குநர் பாண்டியன் தெரிவித்தார்.பெரம்பலூர் மாவட்ட ஒருங்கிணைந்த வேளாண்மைத்துறை அலுவலக வளாகத்தில், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் ஆலத்தூர் ஒன்றியம், ஜமீன் ஆத்தூர் கிராமத்தைச்சேர்ந்த 46 பேர்களுக்கு தலா ரூ. 4 ஆயிரம் மதிப்பிலான மானியத்துடன் கூடிய விதைப்பொருட்கள், இயற்கை உரங்கள், பூஞ்சானமருந்து உள்ளிட்ட இடுபொ ருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நேற்று நடந்தது. இதில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் உதவி இயக்குநர் பாண்டியன் கலந்துகொண்டு, 23 விவசாயிகளுக்கு மக்காச்சோள விதைகளையும், 23 விவசாயிகளுக்கு பருத்திவிதைகளையும் அவற்றோடு இடுபொருட்களையும் வழங்கிப் பேசியதாவது:பெரம்பலூர் மாவட்டத்தில் கலெக்டர் தரேஸ் அஹமது அறிவுறுத்தலின் பேரில், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் அழகிரிசாமி தலைமையில், துணை இயக்குநர் செந்தமிழ்ச்செல்வன் முன்னிலையில், நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமையின் கீழ் 4 ஒன்றியங்களிலும் உள்ள 27 கிராமங்களில் வேளாண் உற்பத்தியை பெருக்கும்விதமாக பயிர் செயல்விளக்கத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் பெரம்பலூர் ஒன்றியத்தில் 10 நீர்வடிப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த 199 விவசாயிகளுக்கும், வேப்பந்தட்டை ஒன்றியத்தில் 8 நீர்வடிப்பகுதி கிராமங்களைச்சேர்ந்த 200 விவசாயிகளுக்கும், ஆலத்தூர் ஒன்றியத்தில் அருணகிரிமங்கலம், ஜமீன் ஆத்தூர், அயினாவரம், இலுப்பைக்குடி ஆகிய 4 நீர்வடிப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த 175 விவசாயிகளுக்கும், வேப்பூர் ஒன்றியத்தில் 5 நீர்வடிப்பகுதி கிராமங்களைச் சேர்ந்த 125 விவசாயிகளுக்கும் என மொத்தம், பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள 27 நீர்வடிப்பகுதி கிராமங்களைச்சேர்ந்த 699 விவசாயிகளுக்கு தலா ரூ. 4 ஆயிரம் என ரூ. 27.96 லட்சம் மதிப்பில் மானியத்துடன் கூடிய விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டு

வருகின்றன.இதில் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு 10 சதவீத பணம், 90 சதவீத மானியத்துடனும், இதர பிரிவினருக்கு 20 சதவீத பணம், 80 சதவீத மானியத்துடனும் விதைகள், இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. இதில் மக்காச்சோள விதைகள் மட்டும் 461 விவசாயிகளு க்கு தலா 7.2 கிலோ வீதம் 3.3 டன்னும், பருத்தி விதை கள் மட்டும் 158 விவசாயிகளுக்கு தலா 900 கிராம் வீதம் 1.42 குவிண்டால் வழங்கப்படுகிறது.இவற்றைப் பெறுகிற விவசாயிகள் வேளாண் மைத் துறையினர் வழங்கும் யோசனைகளை ஏற்று, முழு முயற்சியை செலுத்தினால் உற்பத்தியை பெருக்கமுடியும். அதன் மூலம் அதிக லாபத்தை ஈட்ட முடியும். விரைவில் காய்கறி உற்பத்தியை மேம்படுத்தும் திட்டமும் செயல்படுத்தப்பட உள்ளது என்றார். நிகழ்ச்சியின்போது, ஜமீன்ஆத்தூர் ஊராட்சிமன்றத் தலைவர் கலியபெருமாள் உடனிருந்தார்.

## <u>களஞ்சேரியில் நவீன பண்ணை கருவிகளின் செயல்விளக்கம்</u>

கும்பகோணம், : தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை அடுத்த களஞ்சேரியில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் பண்ணை இயந்திர மயமாக்கல் திட்டத்தின்கீழ் நவீன பண்ணை கருவிகளின் செயல்விளக்கம் நடந்தது. அப்போது விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்து கதிர் அறுவடை இயந்திரத்தால் அறுவடை செய்யப்பட்ட நெல் வயலின் வைக்கோலை கட்டுகளாக எளிதில் கட்டிட பயன்படும் வைக்கோல் கட்டும் கருவி கொண்டு வைக்கோல் கட்டு கட்டி காண்பிக்கப்பட்டது. பண்ணை கழிவுகளை தூளாக்கி பயன்படும் கருவி கொண்டு பண்ணை கழிவுகளை தூளாக்கி காண்பிக்கப்பட்டது. களை யெடுக்கும் இயந்திரத்தில் களையெடுக்கும் முறை, புல்வெட்டும் இயந்திரம் கொண்டு புல் வெட்டும் முறை செய்து காட்டப்பட்டது. தஞ்சாவூர் மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆரோக்கியசாமி, கும்பகோணம் உபகோட்ட உதவி செயற்பொறியாளர் இளங்கோவன், இளநிலை பொறியாளர் சோமசுந்தரம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## <u>பால் உற்பத்தியை பெருக்க கால்நடை மருத்துவ முகாம்</u>

ராமநாதபுரம், :பசுக்களுக்கு பால் உற்பத்தி, ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் தொடர்பான சிறப்பு முகாம் ஆக.30 முதல் 2 நாட்கள் அந்தந்த பகுதி கால்நடை மருத்துவமனைகளில் நடைபெறுகிறது. இதுகுறித்து கலெக்டர் நந்தகுமார் தெரிவித்துள்ளதாவது: வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின்

வாழ்வாதார முன்னேற்றத்திற்காக கறவை பசுக்கள், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகள் அரசு சார்பில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் கறவை பசுக்களின் பால் உற்பத்தியை பெருக்கவும், வெள்ளாடு, செம்மெறி ஆடுகளின் எடையினை அதிகரிக்கவும், தமிழகம் முழுவதும் வரும் ஆக.30 மற்றும் 31 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும். இதில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறி ஆடுகளுக்கு குடற்புழு நீக்க சிகிச்சையும் அளிக்கப்பட உள்ளது. இதில் கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க சிகிச்சை பெற்று பயனடையலாம்.

## <u>சான்றுபெற்ற விதைகளால் அதிக மகசூல் பெறலாம்</u>

ராமநாதபுரம், :சான்றுபெற்ற விதைகள் மூலம் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என விதைச்சான்று அலுவலக இணை இயக்குனர் பழனிச்சாமி தெரிவித்தார். கோவை விதைச்சான்று அலுவலக இணை இயக்குனர் பழனிச்சாமி. இவர் நேற்று திருஉத்திரகோசமங்கையில் உள்ள அரசு விதை சுத்திகரிப்பு நிலையத்தை ஆய்வு செய்தார். அங்கு வைக்கப்பட்டிருந்த விதை மூடைகளில் சான்றட்டை விபரம், எடை அளவு, விதையின் தரம் குறித்து ஆய்வு செய்தார். பின்பு அவர் கூறுகையில், `பருவ மழை தொடங்க உள்ளதை முன்னிட்டு, விவசாயிகள் சாகுபடி பணியை தொடங்க உள்ளனர். ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு தரமான விதைகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சான்றட்டை கட்டப்பட்டுள்ள விதை மூடைகள் தரமானதாக இருக்கும். அனைத்து பயிர்களும் கலவன் ஏதும் இல்லாமல் சீராக, ஓரே ரகமாகவும், பயிரின் மகசூல் கூடுதலாகவும் இருக்கும். சான்றுபெற்ற விதைகளை பயன்படுத்தி விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என்றார்.ராமநாதபுரம் விதைச்சான்று உதவி இயக்குனர் மோகன், விதைச்சான்று அலுவலர் பாக்கியராஜ், திருப்புல்லாணி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் கீதாஞ்சலி, விதை சுத்திகரிப்பு நிலைய அலுவலர் சத்தியவாணி, துணை அலுவலர் கணேசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### வீராணம் ஏரியின் நீர்மட்டம் உயர்வு

இந்த ஏரிக்கு சாதாரண காலங்களில் கீழணையில் இருந்து வடவாறு வழியாக காவிரி தண்ணீர் வருகிறது. மழை காலங்களில் செங்கால் ஓடை, கருவாட்டு ஓடை, வெண்ணங்குழி ஓடை வழியாக தண்ணீர் வருகிறது. இது விவசாயத் துக்கும், சென்னை நகர குடிநீர் தேவைக்கும் வழங்கப்படுகிறது.

தண்ணீர் திறப்பு

சென்னை நகரின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு கடந்த மார்ச் மாதம் வீராணம் ஏரிக்கு கீழணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்பின்னர் மழை பெய்யாததாலும், நீர்வரத்து இல்லாததாலும் ஏரியின் நீர்மட்டம் வேகமாக குறைந்தது. கடந்த 21-ந் தேதி வீராணம் ஏரியின் நீர்மட்டம் 41.10 அடியாக இருந்தது. இந்நிலையில் காவிரி டெல்டா பாசன விவசாயத்துக்காக கடந்த 10-ந் தேதி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் கல்லணை வழியாக காட்டுமன்னார்கோவில் அருகே தஞ்சை, அரியலூர் மாவட்ட எல்லையில் உள்ள கீழணைக்கு 21-ந் தேதி வந்து சேர்ந்தது. இதையடுத்து கீழணையில் இருந்து வடவாறு வழியாக வீராணம் ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் காரணமாக ஏரியின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

நீர்மட்டம் உயர்வு

நேற்று காலை நிலவரப்படி வீராணம் ஏரியின் நீர்மட்டம் 41.75 அடியாக உயர்ந்தது. வினாடிக்கு 400 கன அடி தண்ணீர் கீழணையில் இருந்து வருகிறது. சென்னை நகரின் குடிநீர் தேவைக்கு 71 கனஅடி தண்ணீர் அனுப்பப்படுகிறது. வீராணம் ஏரியின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால் ஏரி பார்ப்பதற்கு கடல்போல காட்சியளிக்கிறது. மேலும், உயரும் நீர்மட்டத்தால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### அறந்தாங்கி பகுதியில் சம்பா பருவ முனைப்பு இயக்கம்

அறந்தாங்கி வேளாண்மை வட்டாரம் நெய்வத்தளி கிராமத்தில் நெல் சம்பா

பருவ முனைப்பு இயக்கம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் பொன்னையா தலைமை தாங்கி, சம்பா நெல் பருவ முனைப்பு இயக்கத்தின் நோக்கம் குறித்து பேசினார். ஆவுடையார் கோவில் வேளாண்மை உதவி இயக்குனர் அடைக்கப்பன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, சம்பா நெல் சாகுபடி செய்வதற்கு முன்பு வயலை தயார் செய்யும் முறை குறித்து விளக்கிப் பேசினார். நிகழ்ச்சியில் நெய்வத்தளி வருவாய் கிராமத்தைச் சேர்ந்த 102 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் பார்த்தீனியம் செடியை ஒழிக்கும் முறை குறித்து செயல்விளக்கம் செய்து காட்டப்பட்டது. இதே போல் ஏகப்பெருமாளூர் ஊராட்சி ஆடலை கால பைரவபுரத்தில் நடைபெற்ற நெல் சம்பா பருவ முனைப்பு இயக்கத்திற்கு ஊராட்சி மன்ற தலைவர் ராயன் வயல்கார்த்திகேயன் தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் சந்திரசேகர் கலந்து கொண்டு காவிரி டெல்டா பாசன பகுதிகளில் நெல் சம்பா பருவ முனைப்பு இயக்கம் நடத்துவதன் நோக்கம் குறித்து பேசினார் நிகழ்ச்சியில் உதவி வேளாண்மை அலுவலர் வனிதா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதே போல் நாகுடி ஊராட்சி அரியமரைக்காடு கிராமத்தில் நடைபெற்ற நெல் சம்பா பருவ முனைப்பு இயக்கத்திற்கு அறந்தாங்கி வேளாண்மை உதவி இயக்குனர் பொன்னையா தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பார்த்தீனியம் விஷச்செடியை அழிப்பது குறித்த தொழில்நுட்பங்கள் செயல்முறை விளக்கமாக செய்து காட்டப்பட்டது.